1032 2
359
OFFICE OF THE REGISTRAR OF BOOKS 31 AUG 1940 MADRAS

REGD. No. M. 2913 ARYA DHARMAM
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் செலவுள்பட]
ஜீவிய சந்தா ... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ... ரூ. 3
ஆறுமாத சந்தா ... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்கு
தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-வருஷம் ஆடி-மீ 31உ 1940-வருஷம் ஆகஸ்டு-மீ 15உ | லக்-32

வைஸ்ராய் அறிக்கை.

யுத்தம் முடிந்ததும் அரசியல் ஆலோசனைஸபை

நிர்வாஹஸபை விஸ்தரிப்பு

இந்திய ராஜீயக்குழப்ப விஷயமாக வைஸ்ராய் அவர்கள் ஆகஸ்ட்-மீ 7-உ யன்று ஓர் முக்ய அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அதில் காணப்படும் முக்ய அம்சங்களாவன:—

யுத்தம் முடிந்த உடனேயே இந்திய தேசிய வாழ்வில் [illegible] களின் பிரதிநிதிகள் அடங்கிய ஸபை ஒன்றை அமைக்க பிரிடிஷ் ஸர்க்கார் இணங்குகிறார்கள். அந்தஸபையானது இந்தியாவிற்கேற்ற அரசியல் முறையை நிர்ணயிக்கும். அந்த நிர்ணயத்தை நிறைவேற்றிவைக்க பிரிட்டிஷ் கவர்மெண்டார் உதவிசெய்வார்கள்

அது வரையில் இந்திய ஜனப்பிரதிநிதிகளில் சிலருக்கு வைஸ்ராய் நிர்வாஹஸபையில் ஸ்தானம் கொடுத்து அவர்களையும் கலந்து நிர்வாஹம் செய்யப்படும்

யுத்த ஆலோசனை ஸபையொன்று ஏற்படுத்தப்படும். அதில் ஜனபிரதிநிதிகளும், சுதேச ஸம்ஸ்தானபிரதிநிதிகளும், ஸ்தானம் பெறுவார்கள்.

இந்திய பிரதிநிதிகள் அரசியலை நிர்ணயிக்குமுன் வகுப்புகளுள் உண்மையான ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும். அதற்கு கவர்மெண்டார் தங்களாலான எல்லாவித உதவியும் செய்வார்கள்.

இதைத்தவிர மேற்படி அறிக்கையில், புதிய அரசியல் திட்டம் வகுக்கும் போது, ராஜீய ஸம்பந்தமாகவோ, மதஸம்பந்தமாகவோ, உள்ள மைனரிடி ஸமூஹத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையை ஆதரித்தும், கண்டித்தும் அபிப்பிராயங்கள் வெளி வந்த வண்ணமாயிருக்கின்றன.

காங்கிரஸ்காரர்கள் எவ்வித அபிப்பிராயமும் வெளியிடவில்லை யாயினும், பொதுவாக அதை எதிர்க்கிறார்கள்.

உலக ஸமாதானத்திற்கு வழி என்ன?

மத போதனையே வேண்டும்.

செங்கற்பட்டில் கிறிஸ்தவ பாடசாலைத் தலைமை ஆசிரியரான டாக்டர் ப்ரீமன் என்பவர் ஒரு உபன்யாசம் புரிந்தார்.

தற்போது போதிக்கப்படும் கல்வியில் மத போதனையில்லாமல் அசட்டை செய்யப்பட்டுவிட்டதாலேயே உலகில் கஷ்டங்கள் அதிகரித்து வருவதாயும், கல்வித்திட்டத்தில் மத போதனமானது [illegible] தான் தற்போது ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்கு பரிஹாரமும், உலக ஸமாதானமும் ஏற்படுமென்றும் கூறினார். மேலும், அவர் மதமென்பது மனிதர்கள் பரஸ்பரம் அன்புடன் நேசிப்பதற்காக ஏற்பட்ட பெரிய பயிற்சிஸ்தானமென்றும், ஒவ்வொருவரும் தம் தம் மதத்தை கௌரவித்துப் பலனடைய வேணுமென்றும் கூறினார்.

மாணவர்களுக்கு கட்டாய ராணுவப் பயிற்சி

சென்னை யூனிவர்ஸிடியின் தீர்மானம்

ஆகஸ்ட்-மீ 8-உயன்று நடந்த ஸர்வகலாசாலைக் கூட்டத்தில் மாணவர்களுக்கு ராணுவப்பயிற்சி விஷயமாக ஓர் முக்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஸர்வகலாசாலையைச் சேர்ந்த எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் எல்லாவித ஆயுத ஸாதனங்களுடன் கூடிய ராணுவப்பயிற்சியானது கட்டாயமாகச் செய்துவைக்கப்படவேணுமென்றும், ஸர்வகலாசாலையில் படிக்கும் ஸ்த்ரீமாணவிகள்யாவருக்கும் கட்டாயமுறையில், நர்ஸ் தொழில் பயிற்சி கொடுக்கப்படவேணுமென்றும் ஸர்க்காரைக்கேட்டுக் கொள்வதாக மேற்படித் தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்தது. ராணுவப்பயிற்சி பெற மத ஸம்மந்தமான ஆக்ஷேபமுள்ள வகுப்பார்கள்கூட அதை ஆபத்கால தர்மமாகக்கருதி ஆக்ஷேபிக்கலாமென்றும் பேசப்பட்டது.

தீண்டாதாரை பள்ளிக்கூடத்தில் சேர்த்ததால் வந்த வினை

ஆமதாபத்தைச் சேர்ந்த கோதாவி என்ற கிராமத்தில் உள்ள பொதுப் பள்ளிக்கூடத்தில் தீண்டாதாரைச் சேர்த்ததால் ஜாதி ஹிந்துக்கள் ஆத்திரமடைந்தனர். இதனால் இரு வகுப்பினருக்கும் சச்சரவு முற்றிவிட்டது. ஜாதி ஹிந்துக்கள் தங்களுடைய, மனை, வீடு முதலியவைகளைக் கொடுத்து தீண்டாதாருக்குச் செய்துவந்த உதவியை நிறுத்திவிடவே அந்த தீண்டாதாரின் பாடு திண்டாட்டமாகி விட்டது. அவர்கள் வெட்டவெளியில் வசித்து வருகிறார்களாம். ஹரிஜன ஸேவா ஸங்கத்தார் விசாரணை நடத்துகிறார்களாம். விஷமிகளின் பேச்சைக் கேட்டு ஏமாந்து தீண்டாதார் கஷ்டப்பட நேர்ந்தது போலும்!

குழந்தைகளுக்கு வியாதி எல்லாம்
சேர்க்கை ஆஹாரத்தினால் தான்.
தாய்ப் பாலில் வளரும் குழந்தைக்கு
கட்டிமாந்தம் முதலிய நோய்கள் வாரா.
ஆயுர்வேதாசார்ய
V. B. நடராஜ சாஸ்திரீ அவர்களின்
பயஸ்யா
தாய்ப் பாலை அளவிலும் ஸாரத்திலும்
அபிவிருத்தி செய்யும் உத்தம ரஸாயனம்.
விலை ரூ 2—4—0 தான்.
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
அல்லது நேரில்
'ஆத்ரேய'
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சினாப்பள்ளி.
பயஸ்யா— புஸ்தகம் வேண்டுவோருக்கு இனமாய் அனுப்பப்படும்.

தமிழ் வேதங்கள்.
வேதங்களின் பரிபூரணத் தமிழ்
மொழி பெயர்ப்பு.

ஸாமவேதம்	ரூ. 1/8.
யஜுர்வேதம்	ரூ. 3/.
அதர்வவேதம்	ரூ. 5/.

Sri. M. R. Jambunathan,
Editor, Vedas & Upanishads in Tamil
Khar, Bambay, 21.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

கோவிலூர்

விசேஷ மஹாநாடு

ஆகஸ்டு-மீ 4 5, தேதிகளில் ராமனாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த செட்டி நாடுகளில் முக்கிய கிராமமாகிய கோவிலூரில் ஓர் மாபெறும் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கமஹாநாடு ஒன்று கோட்டையூர் K.V.S.V. ஸ்ரீ அழகப்பசெட்டியார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது அதற்கு மதுரையிலிருந்து, அ. இ. வ. சு. சங்க காரிய அத்யக்ஷகர் பிரம்மஸ்ரீ ராவ் சாகிப் என். நடேசய்யர் அவர்களும் அ. இ. வ. சு. சங்க உபகாரியதரிசியும் மதுரைடவுன் சங்க அத்யக்ஷகருமான ஸ்ரீமான் என். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்களும் மதுரைதிருப்புகழ் எம். ஸ்ரீசெல்லையா பிள்ளை ஆகியவர்கள் ஞாயிற்றுக்கிழமை காலை 6-மணிக்கு புறப்பட்டு சுமார் 9-மணிக்கு கோவிலூர் வந்துசேர்ந்தார்கள் உடனே மேளதாளங்களுடனும், வேத பாராயணங்களுடனும அவ்வூர் குற்றவாளீஸ்வரர் கோவிலை பிரதக்ஷிணமாக ஊர்வலம் வந்து சுமார் 9/30 மணிக்கு மஹாநாடு ஆரம்பிக்கபெற்றது.

பிறகு வரவேற்பு தலைவரான ஸ்ரீமான் ரெங்கனாத சாஸ்திரிகள் அவர்கள் வெ. மு. ரா. ம. ஸ்ரீராமனாதன் செட்டியார் அவர்களை சங்க கொடியை ஏற்றுவிக்கும்படி கேட்டுக்கொள்ள அதன்படி சங்ககொடியேற்றுவிழா அன்னார் அவர்களால் நடைபெற்றது. பிறகு ஸ்ரீமான் நடேசய்யர் அவர்கள் மஹாநாட்டை திறந்து வைத்தார். திறந்து வைக்கும்பொழுது சிறந்த சொற்பொழிவு ஆற்றினர்.

ஞாயிற்றுக்கிழமை மாலை சுமார் 4மணிக்கு மதுரையிலிருந்து ஆஸ்திக ஹிந்துமாதர் சங்கக் காரியதரிசி மாது ஸ்ரீ குப்பம்மாள் அம்மாளும் ஷை சங்க அங்கத்தினி ஸ்ரீ மதி செல்லம்மாள் அம்மாளும் இன்னும் சிலரும் விஜயம் செய்தார்கள்.

பொதுக்கூட்டம்

இரவு சுமார் 9மணிக்கு ஸ்ரீ அழகப்ப செட்டியார் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் மாபெரும் பொது கூட்டம் நடை பெற்றது. அவ்வமயம் ஸ்வாமி கிருஷ்ணா நந்தர் அவர்களும், செல்லம்மாள் அம்மாள் குப்பம்மாள் அம்மாள் ஆகியவர்களும் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளும் மாஜி காங்கிரஸ் மந்திரிகளால் ஹிந்துமத சமூகத்திற்கு செய்யப்பட்ட தீமைகளை பற்றியும் அக்ரம அட்டூழிய ஆலய பிரவேசம் செய்ததைகண்டித்து ஸத்தியத்திற்கும், அஹிம்ஸைக்கும், மாறுக நடந்து வருவதையும் அஹிம்ஸை ஸத்தியம் என்று சொல்லிக் கொண்டு புலி பசுந்தோலை அணிந்து கொள்வதை போல் ஊர் ஜனங்களையும்பாமரமக்கள்களையும்ஏமாற்றிவருபவர்களை இனிமேல் நம்ப கூடாதென்றும் வருகிற தேர்தல்களில் ஹிந்து மதத்திற்கும் ஆஸ்திகர்களுக்கும் பிரதிநிதியாக நிற்க போகும அ.இ.வ.சு. சங்கத்தார்களுக்கு ஓட் உரிமைகளை கொடுக்க வேண்டும் என்றும் பேசினார்கள். சுமார் 1000 ஜனங்கள் குழுமி இருந்தார்கள். இரவு 11 மணிக்கு கூட்டம் கலைக்கபெற்றது.

5ம் உ காலை சுமார் 9 மணிக்கு மகா நாடு ஆரம்பிக்க பெற்றது. அப்பொழுது ஸ்ரீமான் N.R.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்களாலும் பிரும்மஸ்ரீ ராவ்சாகிப்N நடேச அய்யர் அவர்களாலும் சொற்பொழிகள் ஆற்றப்பட்டன. ஸ்ரீமான் அய்யர் அவர்கள் வ.சு. சங்கத்தின் நோக்கங்களையும் அதன் நிர்மாண திட்டங்களை பற்றியும் S048/39 ஸூட் விஷயமாயும் பேசினார்கள்.

சுமார் $2\frac{1}{2}$ மணிக்கு அகில இந்திய தலைவர்கள் ஸ்ரீமான் என். நடேச அய்யர் அவர்களும் ஸ்ரீமான் என்.ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்களும் அவர்களது கோஷ்டியுடன் மதுரை பிரயாணமானார்கள்.

மாலை 3/25 மணிக்கு மஹாநாடு ஆரம்பிக்கப்பெற்றது அவ்வமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஸ்ரீமான் நடேசய்யர் அவர்களுக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஓர் வரவேற்பு பத்திரமும் ஸ்ரீமான் அழகப்ப செட்டியாருக்குதமிழில் ஓர் வரவேற்பு பத்திரமும் கோவிலூர் சபைசார்பாகவரவேற்பு தலைவரான ஸ்ரீ ரெங்கனாத சாஸ்திரிகள் அவர்களால் வாசித்து அளிக்கப்பெற்றது. பிறகு தலைவர் ஸ்ரீ அழகப்ப செட்டியார் அவர்கள் தலைமையுரைநிகழ்த்தினா.

சுமார் 11 மணிக்கு மஹாநாடு முடிய பெற்றது. பிறகு ஆத்தங்குடி வ. சு. சங்க காரியதரிசி டி பி. ஜெகதீசய்யர் அவர்கள் வந்தனோபசாரம் கூறினர். அத்துடன் நிகழ்சிகள் முடிவு பெற்றன.

தீர்மானங்கள்

1 தற்பொழுது நடைபெற்று வருகிற ஐரோப்பிய யுத்தத்தில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வெற்றி அடைய இறைவனை இம்மாகாநாடு இறைஞ்சுகின்றன.

பிரேரபித்தவர் காரைக்குடி ஜில்லா சபை காரியதரிசி சே. வு. மெய்யப்பசெட்டியார். ஆமோதித்தவர் மணவாள அய்யங்கார்.

2 ஸநதன தர்மத்திக்காக வெகு சிறப்பாக உழைத்து வரும் ஆர்யதர்மம், தர்ம ராஜ்ய பத்திரிகைகளையும் பொதுவாக செட்டிநாடு பத்திரிகையையும் ஆதரித்து ஊக்கமளிக்கும்படி இம்மகா நாடு யாவரையும் வேண்டிக் கொள்கிறது.

பிரேரபித்தவர் கழனிவாசல் எம், நாராயணன் ஆமோதித்தவர் ஆத்தங்குடி பி. எல். வி. ஆர். சுப்பிரமணியன் செட்டியார்.

3 வேதாகம சாஸ்திரங்களுக்கு கேற்ப தேவாலயங்களை நடத்துவதும் தேவாலய நிர்வாகம் நேர்மையுடன் நடைபெறச் செய்வதும் ஹிந்துமத பரிபாலன போர்டின் கடமையாக இருக்கவேண்டியதிற்கு பதிலாக சாஸ்திரங்களுக்கு விரோதமான தீண்டாதார் ஆலயப்பிரவேசக் காரியங்களுக்கு ஷை போர்டு உடந்தையாக இருந்து வருவதும் சிப்பந்திகள் முதலான நிர்வாகச் செலவு அதிகமாக இருந்து வருவதைக் கண்டு இம்மஹா நாடு கேட்டுக்கொள்வது என்னவென்றால் இந்த போர்டை அடியோடு கலைத்து முன்போலவே அந்த ஸ்தல நிர்வாகஸ்தர்களிடம் தேவாலயங்களை ஒப்படைக்க வேண்டுமென கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்கிறது.

பிரேரபித்தவர் குன்னக்குடி கே. என். சுப்பிரமணிய சாஸ்திரிகள். ஆமோதித்தவர் மதுரை திருப்புகழ் எம். செல்லையா பிள்ளை.

4 தற்காலம் சினிமாக்களில் புராணப்படங்களென்று பேர் வைத்துக்கொண்டு புராண சரித்திரங்களின் கொள்கைகளுக்கும் ஹிந்து சமூகத்திற்கும் விரோதமான முறையிலும் உண்மைக்கு மாறுன வழியிலும் தங்கள் தங்கள் இழிந்த நோக்கங்களுக்கு வேண்டிய முறையில் திருத்தியும் பொய்களை கற்பித்தும் படம் எடுக்கப்படுகிறதும் பொது ஜனங்களுக்கு காட்டப்படுவதும் எளிய மக்களுக்கு ஏமாற்றத்தையும் துவேஷ புத்தியையும் உண்டாக்குவதால் அப்படிப்பட்ட சினிமா படங்களை வெளி வருவதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்றும் அப்படிப்பட்ட படத்தைத் தடைசெய்ய வேண்டுமென்றும் சென்ஸார் போர்டார்களைக் கேட்டுக்கொள்கிறது

பிரேரபித்தவர் எஸ். வி. எ. எ. எல். எ. அருணசலம் செட்டியார். ஆமோதித்தவர் கோவிலூர் கே. சதாசிவ குருக்கள்.

5 மாஜி காங்கிரஸ் மந்திரி ஸபையாரால் வரம்பு மீறி நிறைவேற்றின தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தையும் 1939-ல் சென்னை சட்ட சபையில் செய்த சட்டத்தையும் நாடெங்கும் உள்ள கோடிக் கணக்கான சனதனிகள் சென்ற 1 வருஷ காலம் இடைவிடாது மகாநாடுகள், மகஜர்கள் பொதுக் கூட்டங்கள் மூலமாக பலமாக எதிர்த்து தீவிரக் கிளர்ச்சி செய்து வருவதை கவர்ன்மெண்டார் நன்குணர்ந்தும் இன்னமும் அச்சட்டத்தை ரத்து செய்யாமலும் கோயில்களுக்கு கும்பாபிஷேகம் செய்யாமலும் அசட்டையாக இருந்து வருவதைக்கண்டு இம்மகா நாடு வியசனிக்கிறது.

ஷை சட்டத்திற்கு மே. த. வைஸ்ராய் அவர்கள் சம்மதி அளித்த மறுதினமே கொடிய யுத்தம் ஆரம்பமானதும்,மழையின்மை, வெள்ளம், பூகம்பம், கப்பல் கவிழ்தல், ரயில் முதலானவை மோதியும் ஆகிய சேதங்களாகியும் ராஜாங்க க்ஷேபம் ஏற்பட்டும் இருப்பது பிரத்யக்ஷம். சாஸ்திரங்களுக்கு முரணாக தேவாலயங்களுக்கு அபரிசுத்தம் ஏற்படுமேயானல் ஷை சம்பவங்கள் நிகழுமென சாஸ்திரங்கள் கூறுகின்றன. உலக க்ஷேமம், ராஜாங்க நலம் இவைகளை உத்தேசித்து அச்சட்டத்தை ரத்துசெய்ய வேண்டியது அவசியமும் அவசரமும் என இம்மஹா நாடு கேட்டுக்கொள்ளுகிறது.

மேன்மை மிக்க விக்டோரியா மகாராணியார் மதத்தில் தலையிடுவதில்லை என பிரகடனம் செய்து அதற்கேற்ப அவரும் அவரது வழி தோன்றிய சக்கரவர்த்திகளும் இதுகாலும் நடந்து மேன்மையுற்றது போல பிரகிருதம் உள்ள சக்ரவர்த்தி அவர்களும் இவ்வநீதியான தீண்டாதார் ஆலயப்பிரவேசச் சட்டத்தை ரத்து செய்து மதத்தை காற்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறது.

பிரேரபித்தவர் என். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் பி. எ., பி. எல்., ஆமோதித்தவர் வி. எம். ஆர். எம். ராமனாதன் செட்டியார்.

6 இந்திய அரசியல் நிர்ணயம் செய்யும் போது பிரிட்டிஷ் கவர்மெண்டார் பெரும்பான்மையான வைதீக ஹிந்துக்களின் பிரதிநிதி ஸ்தாபனமான அகில இந்திய வர்ணாசரம ஸ்வயராஜ்ய சங்கத்தை கலக்க வேண்டியது அவசியமென வற்புறுத்துவதுடன் மத சமூக விஷயங்களில் பல சமூக வாதிகளைக் கொண்ட சட்ட சபைகள் தலையிடா வண்ணம் மதசமூக பாதுகாப்புடன் கூடிய அரசியலை அமைக்க வேண்டுமென இம்மகா நாடு தீர்மானிக்கிறது.

பிரேரபித்தவர் வி. வி. ரெங்கனாத சாஸ்திரிகள் ஆமோதித்தவர் ஆர். விஸ்வநாதன்

7 வைதிக ஸம்ஸ்காரத்தை பெரிதும் அடிப்படையாகக் கொண்டு விவாகத்தை புனிதமாக மதிக்கும் அதுவும் குறிப்பாக பிராமணசமூகத்தாரையும் பொதுவாக வேறு சில

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க.)

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா

ஓர் பிரார்த்தனை !! தார்மிக சக்கரவர்த்தியான கொச்சி ராஜர் ஸபையிலும் ருதுமதீ விவாஹ சட்டம் தோன்றி இரண்டாம் முறை படித்தாய் விட்டது. மூன்றும் முறை படித்து சட்டமாக்குவதற்குள் நமது கடமையைச் செய்யவேண்டும். ஆங்காங்கு கண்டனக்கூட்டம் போட்டு அரசருக்கு தெரிவிக்கவேண்டும். முன்னற் பயனற்றுப் போனதே என அயர்ந்து விடக்கூடாது. இது வேறு மாதிரியானது.

ஐவருக்குத் தெரிவிக்கவும் !! மஹாராஜா, திவான், சட்டஸபைத்தலைவர், ஸ்பெஷல் கமிட்டித்தலைவர், கான்பரன்ஸ் கமிட்டித் தலைவர் என இவர்களுக்கு தெரிவித்தால் விரைவில் பயன் உண்டாம். மத விஷயங்களைக்கவனிக்க ஏற்பட்ட ஸ்பெஷல் கமிட்டியையும் கான்பரன்ஸ் கமிட்டித்தலைவர் ஸ்ரீ பரீக்ஷித் மஹாராஜாவையும் கலக்காமல் இச்சமயம் கொண்டுவரப்பட்டது. அவர்களுக்கு நாம் பலமளித்தால் அவர்கள் வாதாடக்கூடும். பயன் நிச்சயமுண்டாம்.

நம்மையும் பாதிக்கும்!! தர்ம ராஜ்யத்திலே இங்ஙனம் நடந்தால் பெரும் நஷ்டமல்லவா? நம் நாட்டிற்கென்னவென்றிருக்கலாகாது. எங்கேனும் தர்மம் கெடாதிருந்தால் நல்லதல்லவா? இது என் தனி வேண்டுகோள் மாத்திரமல்ல. தார்மிகத்தலைவரில் ஒருவரான பிரும்மஸ்ரீ ம. ம. அநந்தகிருஷ்ண சாஸ்திரிகளும் இங்ஙனம் கோருகிறார்! ஆதலின் பற்பல விடங்களிலிருந்தும் கண்டனம் செய்யவேண்டும்.

சென்னையில் கண்டன ஸபை!! 11உ காலை 8 மணிக்கு அமரகலாவிலாஸினீ ஸபையினுதரவில் ஸ்ரீமான் புருஷோத்தம அய்யர் அக்ராஸனத்தின் கீழ் ஓர் கூட்டம் நடைபெற்றது. கொச்சி சட்டஸபை செய்கையைக்கண்டித்து ஷை சட்டம் செய்யக்கூடாதென்பதை ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா விளக்கி உபன்யஸித்தார். ஐவருக்கும் தந்தியும் தபாலுமநுப்பப்பட்டது.

அரிய ஐம்பதாமாண்டு விழா!! கிருஸ்தவரது அக்ரமத்தைப்பொறுக்காமல் அவர் கலாசாலையிலிருந்து விலகி பாண்டியா என்பார் ஐம்பதாண்டுகளுக்கு முன் சென்னை ஹிந்து தியலாஜிகல் கலாசாலை ஆரம்பித்தார். இதுவரை எங்கும் எவரும் நடத்தாதபடி தலைவர் 10 நாள் காலையில் நவக்ரஹ ஹோமம், மஹந்யாஸ பூஜை, மகோபன்யாஸம், ஏழைக்கன்னதானம், கச்சேரி, மாலை லௌகிக உபன்யாஸம் முடிவில் சிறந்த ஊர்வலம் முதலியவைகளை நடத்தினர்.

காசியில் மஹா ருத்ரம்! மாளவ்யா உலக க்ஷேமத்தை நாடி ஷை யாகம் செய்கிறார். தென்னாட்டில் யார் செய்வார்?

பூண்டி விழா சண்டை!! சென்னை ஜல விநியோகத்திற்காக பல லக்ஷ ரூபா செலவில் பூண்டியில் ஓர் அணைக்கட்டு ஆரம்ப விழா நடந்தது. அஸ்திவாரக்கல் கவர்னர் கையால் நடவேண்டுமென மோஹத்தால் அதில் கலப்பதா வேண்டாமா? என காங்கிரஸ் கக்ஷி சண்டை பலத்து ஆந்த்ர ஸபை கூடாதென்றது. தமிழ் ஸபை இஷ்டமென்றது! விழாவும் முடிந்தது.

தக்ஷிணாயன விவாஹம்

அனந்தபூரிலிருந்து ஸ்ரீ என். கே. வெங்கடேசம் பந்துலு எழுதுவதாவது:—

"தக்ஷிணாயனத்தில் விவாஹம் செய்யலாமா என்பதைப்பற்றிய பிரசினையை குறித்து ஆரியதர்மம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த கும்பகோணம் அத்வைதசபை கமிட்டியாரின் முடிவைமிக்க கவனமாய் படித்து பார்த்தேன். 22-7-40உயில் ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியாரும், எரணகுளம் ஸ்ரீ டி. எஸ் அனந்தநாராயண சாஸ்திரியாரும் எழுதிய கடிதங்கள் ஹிந்து பத்திரிகையில் பிரசுரமாயிருந்தன. அவைகளை படித்து பார்க்கையில் ஸ்ரீ ராமசாமி சாஸ்திரியாரை விட ஸ்ரீ அனந்த நாராயண சாஸ்திரியரே தகுந்த வழி காட்டியாகயிருக்கிறார் என்று நினைக்கிறேன். தக்ஷிணாயனத்திலும் கூட விவாஹம் செய்யலாம் என்பது அத்வஹியில் ஒரு ஏற்பாடு என்றும் மேலும் புராதன வழக்கங்களால் கண்டுண்டு கிடக்கும் ஹிந்து மதத்தின் கட்டை சிறிதுதளர்த்திவிடுவதாயுமிருக்கிறதென்றும் ஸ்ரீ கே. எஸ். ராமசாமி சாஸ்திரியள் கூறுகிறார். அது அப்படியல்ல. ஆந்திரர்களும் சாதாரண தக்ஷிணாயனத்தில் விவாஹம் செய்கிறார்கள் என்று சொல்லுவது தவறு வேதபுரஸ்கரமான யக்ஞங்கள் செய்வதற்கு குறிப்பிட்ட 5 மாதங்கள்தான் சிறந்தவைகள் என்று ஆந்திரர்கள் கொண்டிருக்கிறனர். அதாவது மாசிமீ'மும் அதையொட்டிய 4மாதங்களும் தான் ?வ்வித சுபகாரியங்களுக்கும் சிரேஷ்ட[illegible]னவைகள். ஓர் பிரமம்சாரி தான் ஸ்நாதகவிரதமோ, சன்யாச ஆசிரமமோ கொள்ள இச்சையின்றி விவாஹம் செய்து கொள்ள விரும்புவானேயானல், சமாவர்த்தன விரதமும் விவாஹ சடங்குனுடன் சேர்த்து நடத்த வேண்டியிருப்பதை முன்னிட்டு விவாஹத்திற்கு உத்திராயணத்தில் குறிப்பிட்ட மாசி மாதம் முதல் ஜேஷ்டம் முடிய 5 மாதங்களே சிரேஷ்டமானவை என்பதில் சந்தேகமில்லை. உத்திராயணத்தில் விவாஹம் நடத்த முடியாதபடி எதிர்பாராமல் ஏதேனும் அசௌகரியமும் சிரமமும் ஏற்படுமாகில், விவாஹம் இரு சம்பந்திகளைப் பொருத்தியதைப்பற்றியும் அவரவர்களின் குடும்ப அநுஷ்டான சம்பிதாயங்களை பொருத்தும் தக்ஷிணாயனத்தில் விவாஹம் செய்வது அநுமதிக்கப்பட்டிருக்கிறது இரண்டாவது விவாஹத்திற்கும் காலபிற்பாடான விவாஹத்திற்கும் விதிகள் ஒன்றும் கிடையாது. ஏனெனில் அவைகள் காம்ய விவாஹகங்களாக கருதுகின்றனவே தவிர ஆக்னீயமல்ல. இந்த சலுகையே விதியை நிரூபிக்கிறது.

தக்ஷிணாயனத்தில் விவாஹம் செய்ய அநுமதியிருக்கிறது என்று சொல்வது தவறு. அவ்விதம் அநுமதிக்கப்பட்டிருந்தால் வேத புரஸ்ஸரமான யக்ஞகளுக்கும் அநுமதிக்கப்பட்டிருக்கவேண்டும். யக்ஞயங்கள் உத்திராயணத்தில் செய்வதுதான் சிரேஷ்டமென்று உறுதிகொண்டிருக்கும் பக்ஷத்தில் விவாஹத்திற்கும் உத்திராயணம் தான் சிரேஷ்டம் என்று கொள்ளவேண்டும். ஏனென்றால் விவாஹமானது ஸ்திரி புருஷர்களுக்கு வேதபுரஸ்ஸரமான யாகாதிகளை செய்ய பாத்யதையை அளிக்கிறது. கிருஹஸ்தர்களால் செய்யப்படவேண்டியது பஞ்சமஹா யக்ஞயம். ஆகையால் எவ்விதம் பிரமம்சாரியானவன் தான் த்விஜ விருத்தியை அவலம்பனம் செய்ய உத்திராயணத்தில் ஆரம்பிக்கிறனே, அதேபோல் கிருஹஸ்தன், முதல் முதலில் கிருஹஸ்தாசிரமத்தை உத்திராயணத்தில்தான் ஆரம்பிக்கவேண்டும்.

"அடிப்படையான தத்வங்களை அசைக்கக்கூடாது"

ஸர். ஷண்முகத்தின் புத்திமதி

சென்னை ஸர்வகலாசாலையின் பட்டமளிப்பு பிரஸங்கத்தை கொச்சிதிவான் ஸர் ஷண்முகம் செட்டி 9-உயன்று செய்தார். அவர்கள் பற்பல விஷயங்களைக் குறிப்பிட்டார்.

கல்வியில் சிலதிருத்தங்கள் அவசியமானாலும் அடிப்படையான ஒழுக்க முறையில் மாறுதல் செய்யக்கூடாது. மாறுதல்களுக்கு இடமளிப்பது ஜீவயத்தின ஸூக்ஷ்மமாயினும், கட்டுப்பாடு நமக்கு வேண்டும். இல்லாவிட்டால் ஸமூஹம் நசித்து விடும்.

ஒவ்வொரு சகாப்தமும் புதுமாதிரியாயிருந்தாலும், சில அடிப்படையானதத்வங்கள் மாத்திரம் என்றைக்கும் நிரந்தரமாகவே இருக்கின்றன.

இந்த அடிப்படையான தத்வங்களை அசைத்து விட விரும்புவோர் உலக கஷ்டங்களுக்குக் காரணமாகின்றனர்.,

வகுப்பு வாதத்தகாரனது மதத்தையோ கலையையோ ஆதாரமாகக் கொண்டு ஏற்பட்டதில்லை யென்றும் அதுகேவலம் உத்யோக அதிக ஆசையால் தான் ஏற்பட்டதென்றும், அததான் அதன் முக்[illegible] ஸர் ஷண்முகம் கூறினர்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி.)

வகுப்பினரையும் பாதிப்பதால் அப்படிப்பட்ட சாரதா சட்டத்தினின்றும் ஷை சமூகத்தினரை விலக்கு செய்யும்படி கவர்மெண்டாரை இம்மகா நாடு கேட்டுக் கொள்கிறது.

பிரேரேபித்தவர் கோட்டையூர் ஜி. சுப்ரமணிய சாஸ்திரிகள் ஆமோதித்தவர் டி. வ. ஸ்வாமிநாத குருக்கள்.

8 ஸனாதன தர்ம வித்யாலயங்கள் ஒவ்வொரு ஊரிலும் ஸ்தாபித்து மதக் கல்வி போதிக்க வேண்டியது இன்றியமையாதது என இம்மகா நாடு கேட்டுக்கொள்கிறது.

பிரேரேபித்தவர் டி. ஆர். சுந்தரேஸ்வர சாஸ்திரிகள் ஆமோதித்தவர் கே. ஏ. ராமசாமி ஆதரித்தவர் எஸ். ஜெகந்நாதன் திருநெல்வேலி பி. சிதம்பரம் பிள்ளை.

9 கிராமந்தோறும் எ. ஐ. வி. எஸ். சங்கத்தின் கிளைச்சங்கங்கள் ஸ்தாபித்து பெரும்பான்மையான அங்கத்தினர்களை சேர்த்து தீவிர கிளர்ச்சி செய்ய வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர் ஆத்தங்குடி டி. பி. ஜெகதீசய்யர். ஆமோதித்தவர் திருவாரூர் ஸ்வாமி கிருஷ்ணநந்தர்.

10 ஷை தீர்மானங்களை கவர்ன்மெண்டு அதிகாரிகளுக்கு அறியப்படுத்தும்படி அ. இ. வ. ஸ். ச. காரிய அத்யக்ஷகர் ஸ்ரீராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறது.

பிரேரேபித்தவர் எஸ். வி. கதிரேசன் செட்டியார். எல்லா தீர்மானங்களும் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டன. (ந-தி)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஹூ ஆடி-மீ 31உ

வைஸ்ராய் அறிக்கை.

நெருக்கடியான இந்த யுத்த ஸந்தர்ப்பத்தில் இந்திய ராஜீய நிலைமையில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை நிவிருத்திக்க வேண்டியது மிக அவச்யமென்பதை பிரிடிஷ் ஸர்க்கார் வேகமாக உணர்ந்து வருகிறார்கள்.

[illegible]ம் வைஸ்ராய் அவர்கள் 7உயன்று ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அதன் சாராம்சம் இன்று நமது பத்திரிகையில் மற்றொருவிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. தேசத்தில் பிரதான ராஜீய ஸபையாக நினைக்கப்படும் காங்கிரஸானது, குடியேற்ற நாட்டந்தஸ்து, சுய நிர்ணய உரிமை, அரசியல் நிர்ணய ஸபை அமைப்புப்போன்ற பலவிதகோரிக்கைகளை வெளியிட்டுக் கடைசியாக இந்தியாவிற்கு பூர்ண ஸ்வேச்சையே வேண்டுமென்று வெகு உச்சஸ்தானத்தில் ஏறி நிற்கிறது. உடனே பூர்ண ஸ்வேச்சை வழங்காவிட்டாலும், அந்த உரிமை இந்தியாவிற்கு இருப்பதாக தற்காலம் ஒப்புக்கொண்டால்போது மென்றும், அதற்கு பூர்வாங்கமாக மத்ய கவர்ன்மெண்டில் ஒரு தேசிய நிர்வாக ஸபை அமைக்கப்பட வேணுமென்றும் டெல்லியில் தீர்மானித்திருக்கிறது. வைஸ்ராய் அறிக்கையானது மேற்கண்ட குறைந்பக்ஷக்கோரிக்கையைக்கூட பூர்த்தி செய்து வைக்கவில்லையென்று காங்கிரஸ் தலைவர்கள் ஏமாற்ற மடைந்திருக்கிறார்கள். மிதவாதி ஸபை ஹிந்து மகாஸபை போன்றவைகளும் ராஜப்ரதிநிதியின் அறிக்கையைப் பூர்ண திருப்தியுடன் வரவேற்கவில்லை. கனம் சாஸ்திரியார் பல குறைகளை வெளியிட்டிருக்கிறார். வைஸிராய் நிர்வாகஸபையில் முக்ய ராஜீய கக்ஷி பிரதிநிதிகளை சேர்ப்பதால் ஆள் கூட்டம் அதிகரிக்குமேயன்றி அதற்கு அதிகார சக்தியோ, ஜனப்ரதிநிதித்வயோக்யதையோ இருக்காதென்று கனம் சாஸ்திரி குறை கூறுகிறார். மேலும் குடியேற்றநாட்டந்தஸ்து கொடுக்க ஏன் திட்டமாக ஒரு காலத்தைக் குறிப்பிடக்கூடாதென்றும் சாஸ்திரியார் கேட்கிறார்.

ஹிந்து மஹா ஸபையாரும் மெஜாரிடிகளான ஹிந்து ஸமூஹத்தினரின் உரிமைக்கு ஸரியான பாதுகாப்புச் செய்வதான உறுதிமொழி யொன்றும் அந்த அறிக்கையில் காணப்படவில்லை யென்று கண்டிக்கிறார்கள்.

வைஸ்ராய் அறிக்கையில் மதாபிமானிகள் தைர்யமடையும் படியான உறுதிமொழி யொன்றும் காணப்படாததும் கவனிக்கத்தக்கது 1935-ம் வருஷத்திய சீர்திருத்தச் சட்டத்தில் மதத்திற்கு ஸரியான பாதுகாப்புச் செய்யத் தவறி விட்டதுடன் ஏற்கனவே யிருந்த பந்தோபஸ்தும் எடுக்கப்பட்டு விட்ட காரணமாக, மாகாண ஆக்ஷியில் சென்ற 2 வருஷமாக நடந்த அட்டூழியங்களுக்குக் கணக்கில்லை. இதன் பலனை தேசத்தில் கூக்குரலும், கிளர்ச்சியும், அதிருப்தியும் அதிகரித்து பெருத்த குழப்பம் நேர்ந்திருப்பதை வைஸ்ராயோ, வேறு அதிகாரியோ மறைப்பதற்கில்லை. ஆயினும் ராஜீய தந்திரம் காரணமாக கவர்மெண்டார் ஆஸ்திக ஸமூஹத்தினரின் நியாயமான கோரிக்கையைக் கவனிக்காமல் உதாஸீனம் செய்தார்கள். விக்டோரியா மஹாராணி கொடுத்த உறுதிமொழியையும், பிறகு பார்லிமெண்டால் பலதடவை உறுதிப் படுத்தப்பட்ட மதப்பாதுகாப்புக் கொள்கையையும் காற்றுவாக்கில் விட்டு விட்டார்கள். தாங்கள் செய்வது தவறு என்று தெரிந்திருந்தும், கூட மத நடுநிலைக் கொள்கையை பலியிட்டு விட்டார்கள். ஆயினும் இப்போது பெரிய ராஜீய மாறுதல் செய்யப்புகும் காலத்திலாவது மதப்பாதுகாப்பு விஷயமாக ஒரு திட்டமான வியவஸ்தை செய்ய வேண்டாமா? மதாபிமானிகளை அழைத்து அவர்களது குறையைக் கேட்க வேண்டாமா? வைஸ்ராய் அறிக்கையில் இந்த முக்ய விஷயத்திற்கு எவ்வித விமோசனமும் காணப்படவில்லை.

மைனாரிடி ஸமூக மத விஷயத்தைப்பற்றிய கனம் வைஸ்ராய் குறிப்பிட்டிருப்பது பெரும்பாலும் மகம்மதியர்களைப் பற்றியதே என்று நாம் நினைக்கத் தடையில்லை. யுத்தம் முடிந்த பின் அமைக்க உத்தேசிக்கப்படுகிற அரசியல் ஆலோசனை ஸபையிலாவது தார்மிகஸமூகத்திற்கு பிரதிநிதித்வம் கிடைக்குமென்ற உறுதியும் அவ்வறிக்கையில் காணப்படவில்லை. ஆதலால் தார்மிகக் கக்ஷியாரும் வைஸ்ராய் அறிக்கையில் திருப்தியடைய நியாயமில்லை.

நீண்ட காலமாக அதிகாரப் பொறுப்பைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டு நன்மையடைந்தவர்கள் திடீரென அதைப் பிறரிடம் விட்டுக் கொடுத்துவிட மாட்டாரென்பது உலக இயற்கை. வைஸ்ராய் அறிக்கையோ, பிரிட்டனின் போக்கோ இந்த நிலைமையில் தான் இருக்கிறதென்றால் இதில் ஆச்சரியப்பட எவ்வித நியாயமுமில்லை. ஆயினும் கிடைத்த வரையில் பெற்றுக்கொண்டு, மேற்கொண்டு கிளர்ச்சி செய்வதே நியாயமென்ற திலகர் கொள்கையே தற்போது ஏற்றதென ராஜீய விவேகிகள் பலர் நினைக்கிறார்களெனத் தெரிகிறது. காங்கிரஸின் பேச்சிற்கு ஸர்க்கார் மதிப்புக் கொடுக்காததையும் இச்சமயம் காங்கிரஸ்வாதிகள் சிந்திக்கவேண்டியதவச்யம். காங்கிரஸ்காரர்கள் தேசத்தில் ஒற்றுமையை வளர்க்கத் தவறி விட்டார்கள். வேற்றுமையையே அதிகரிக்கச் செய்தார்கள். காங்கிரஸை விட்டுப் பல காரணங்களால் பலர் பிரிந்து போகும்படி செய்தார்கள். அலக்ஷியம், அஹம்பாவம், அநீதி முதலியவைகளில் மூழ்கி தேச மகா ஜனங்களின் கடுமையான அதிருப்திக்கு காரணமாகி விட்டார்கள். இதனால் ஸர்க்காருக்கு காங்கிரஸிடம் மதிப்புக் குறைந்துவிட்டது.

தேசத்தின் பூர்ண ஆதரவுடனும் ஐகமத்யத்துடனும் காங்கிரஸ் தனது கோரிக்கையை வெளியிட்டிருந்தால் பிரிட்டன் அதை எளிதாகப் புறக்கணிக்கத் துணிந்திராதல்லவா? காங்கிரஸுக்கு இப்போதாவது இந்தப் படிப்பினை ஏற்படுமா?

காங்கிரஸ் பூர்ணஸ்வேச்சை கேட்பதும் தற்போது அஸந்தர்ப்பமாகும். இன்னும் சில தலைமுறை வரையில் இந்தியா இதைச் சிந்திக்கக்கூடிய நிலையில் இல்லை. நவீனயந்திர ஸாதன யுத்தமுறைகளோ, தரைப்படை கப்பல் படை ஆகாயப்படை முதலியவைகளோ ஸ்வேச்சை இந்தியாவிற்கு எங்கேயிருக்கிறது? எதிரிகளின் ஸைன்யங்கள் வந்து நம்மை, ஆகாயமூலமும், கப்பல் மூலமும் தாக்கினால் காங்கிரஸ், காந்திய அஹிம்ஸா மந்திரத்தை ஜபித்தால் போதுமா? தேசியக்கொடியையும், கதராடையையும் காட்டி அவைகளை எதிர்க்கலாமா? இன்று இந்தியாவிற்கு ஸ்வேச்சை கொடுத்து பிரிட்டன் விலகி விட்டால் இந்தியா தன்னைப் பாது காத்துக்கொள்ள வழி என்ன?

ஆதலால் ஆதீதக் கோரிக்கையை விட்டு நியாய வரம்புமீறாமல் எல்லாஜாதி மத வகுப்புக்களின் உரிமையைக் காப்பாற்றுவதாக உறுதி கூறி குடியேற்ற நாட்டந்தஸ்தை அங்கீகரித்து நடத்துவதே தத்காலம் விவேகமாகும்.

இதில் காங்கிரஸானது வீண் பெருமை பாராட்டி ஒதுங்கி நின்றால் மற்ற ராஜீயக் கக்ஷிகள் யாவும் ஒன்று பட்டு தேச நிர்வாஹத்தை ஏற்க வேண்டியது அவச்யமாகும் இல்லையேல் அபாயகரமான வகுப்புவாதப் பேர்வழிகள் நிர்வாஹத்தில் புகுந்து தேசம் பாழாகிவிடும். இந்த நிலைமைக்கு இடமளிக்கக்கூடாது

ஹிந்து தர்ம ஸேவா ஸங்கம்

மதுரை

வைஸ்ராய்க்கு வேண்டுகோள்.

ஷை சங்கத்தின் ஆதரவின் கீழ் சென்ற ஜூலை மீ 27உ மதுரையில் ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்த பண்டார சன்னதிகளின் தலைமையின் கீழ் நடந்த ஸனாதனிகளின் பொதுக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, மே. த. வைஸ்ராய்க்கு அனுப்பப்பட்டது. தீர்மானங்களின் கருத்தை விளக்கி ஸ்ரீ பண்டாரசன்னதிகளவர்கள் வைஸ்ராயிக்கு தனி கடிதமும் எழுதியுள்ளார்.

1. இக்கூட்டம் இம்மகாணத்துக்கு விஜயம் செய்யும் மே. த. வைஸ்ராயை அன்புடன் வரவேற்கிறது. காங்கிரஸ், நாட்டின் ஜனங்களின் பிரதிநிதி இல்லையென்று தெரிந்து கொள்வதற்கான முயற்சிகள் செய்த மே. த. வைஸ்ராயை பாராட்டுகிறது.

2. இக்கூட்டம் மன்னர்பிரானுக்கு ராஜபக்தியையும், விச்வாஸத்தையும் தெரிவிப்பதோடு, பிரிட்டன் தற்போதுள்ள தன் கஷ்ட நிலையை தாண்டுவதற்கு மனப் பூர்வமாக எல்லா உபகாரமும் செய்ய சித்தமாயிருக்கிறது.

3. பிரிட்டனுக்கு உள்ள சிரம தசையானது, அனாதி காலமாக, மிகவும் சான்னித்யமுள்ள மதுரை கோவிலை அசுத்தப்படுத்தியதாலும் மே. த. வைஸ்ராய் சென்னை ஆலயப்பிரவேச சட்டத்துக்கு சம்மதம் கொடுத்ததாலும் தான் என்று திடமாக நம்பப்படுகிறது. கோவிலை சுத்தப்படுத்தி பழயநிலைக்கு கொண்டு வந்தால், பழய சான்னித்யம் உண்டாகுமென்றும், அப்படி செய்வது அசாஸ்திரீய ஆலயப்பிரவேச சட்டத்தை

ரத்து செய்தால் தான் ஆகுமென்றும், மேலும், ஆதிகாலம் முதற்கொண்டு ரிஷிகளும் மற்றும் பெரிய ஆசார்யர்களும், கோவில்களை கெடுத்தால் ராஜ்யம் சீரழியும் என்று சொல்லியிருப்பதாலும், இக்கூட்டம் ஷை அதெய்விக சட்டமானது ரத்து செய்யப்பட்டால் பிரிட்டனுக்கு எல்லா கஷ்டங்களும் தீருவதுமன்றி யுத்தத்திலும் ஜயம் வரும் என்று உறுதியாக அபிப்பிராயப் படுகிறது.

ந. நி

கொச்சி பால்ய விவாஹ தடை மசோதா.

(ராவ்ஸாஹிப் ஸ்ரீ நடேசய்யர்)

பால்ய விவாஹ தடை மசோதாவானது கொச்சி சட்ட சபையில் நிறைவேறியது என்ற செய்தியை தினசரிகளில் பார்த்தோம். பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து குடியேறின பிராமணர்களையும், மற்றும் ருதுவுக்கு முன் விவாஹம் செய்யும் கட்டுப்பாடுடைய பல ஜாதியினர்க்கும், ஷை சட்டம் பாதிக்காதவாறு செய்த முயற்சிகள் வீணாயின. இம்மாதிரியான சட்டங்களை, பிரிட்டிஷ் இந்தியாவில் பலமாக கண்டிக்கப்பட்டும், அதற்கு எதிர்ப்பும் தினேதினே விருத்தியாய்க் கொண்டிருக்கும் போதும், பக்கத்து ராஜ்யமான திருவாங்கூரில் இச் சட்டம் கைவிடப்பட்டும், தார்மிக கொச்சிசர்க்கார் மட்டும், தனிப்பட்ட ஒரு மெம்பர் கொண்டுவந்த, அசாஸ்திரீயமானதும்,பழய பழக்கங்களுக்கும் விரோதமான, ஒரு சட்டத்துக்கு, ஆதரவு கொடுப்பதானது வருந்தத்தக்கது.

பல ஆயிரம் வருஷங்களாக அனுஷ்டானத்தில் இருந்துவரும் பழக்க வழக்கங்களை, மாற்றுவதற்கு முன் தீர்க்கமாக ஆலோசிக்கவேண்டும். சேர்ந்தார் போலும் அனுதிகாலமாயும், ஒரு வித தடங்கலுமில்லாமலிருப்பதே அவைகளுடைய நீதிக்கும், நம்மைக்கும் ஒரு சிறந்த சான்றாகும். ருதுவுக்கு முன் விவாஹம் செய்யும் ஜாதியினரை மூடர்கள் என்றுவது, நாகரீகமற்றவர்கள் என்றுவது ஒருக்காலும் சொல்ல முடியாது. பல பெரிய ஆசார்யர்களும், நீதிமான்களும் ராஜ தந்திரிகளும் அக்கூட்டத்தை சேர்ந்தவர்கள் என்பது எல்லா ஆக்ஷேபணைகளுக்கும் தகுந்த சமாதானமாகும். மனு, யாக்ஞவல்கியர், சங்கரர், ராமனுஜர், மற்றும் பல பெரியோர்களும் சேர்ந்த ஜாதியினரை காட்டுத்தன்மை யுள்ளவர்கள் என்று சொல்வதா? வம்சத்தின் சுத்தத்தையும் சிறந்த அம்சங்களையும் காப்பாற்றுவதற்கு பால்ய விவாஹமே சிறந்த வழியாகும். சுருதிகள், ஸ்மிருதிகள், புராணங்கள் முதலியவைகள் தெய்விகம் வாய்ந்தவை. மனித அம்சம் கிடையாது.

பிரஜைக்கும், அரசனுக்கும் உறவுள்ள சாதாரண பிறப்புரிமைகளை பாதிக்குமாறு, ஒரு சட்டத்தை, அவசர காலத்தின்போது தவிர, இயற்ற அரசனுக்காகவாவது, அரசனுக்கு அடங்கிய சட்ட சபைக்காகவாவது அதிகாரம் கிடையாது.

ஒரு ஹிந்து அரசனுடைய முக்கிய கடமை யாதெனில் தொன்று தொட்ட நாட்களாயுள்ள சட்டங்களை காப்பாற்றி, அவைகளை ஜனங்கள் அனுசரிக்கும்படி செய்வதேயாகும். சமூக சீர்திருத்தம் என்று மதத்துக்கு விரோதமான சட்டங்களை செய்வது இல்லை. இச்சட்டம் இயற்றியதின் காரணமும் நியாயமும் என்ன? அதன் அவசியத்துக்கு ஒரு நியாய காரணமும் தென்படவில்லை. பிரிட்டிஷ் இந்தியாவில் பால்ய விவாஹ தடை சட்டம் அமுலிலிருப்பதனுல் விளையும் தீமைகள் என்ன? பிரும்மசாரி தகப்பனர்களும், கன்னி தாயார்களும், அசங்கியமான ஆண் பெண் ஓட்டங்களும் மற்றும் பல அருவருக்கத்தக்க சம்பவங்களுமே தான். நாகரீகத்தில் மேம்பட்டதாக நினைக்கப்படும் ஐரோப்பிய, அமெரிக்க தேசங்களில், ருதுமதி விவாஹத்தின் தீங்குகளை நன்றாக உணர்ந்து வருகின்றனர். ஹிந்து மத தத்வங்களை கடைபிடிக்கும் தார்மிக சக்ரவர்த்தி கொச்சி மஹாராஜாவை இச்சட்டத்தின் விருத்தியை தடுத்து அவசியம் சேர்த்தால், ரத்து செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்".

தஞ்சாவூர் பனிரெண்டாவது வருஷ ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி மஹோத்ஸவம்

தஞ்சாவூர் கோட்டை ஸ்ரீ பிரஸன்ன வெங்கடேசப்பெருமாள் கோவில் சந்நிதியில் வடபுரம் விளங்கிவரும் ஸ்ரீ ஆஞ்சநேயஸ்வாமிக்கு பனிரெண்டாவது மஹோத்ஸவமானது நாளது ஷை ஆவணி மீ 2௳ (17—8—40) ஸ்திரவாரம் முதல் ஆரம்பித்து [illegible] 11௳ யன்று (26—8—40 திங்கட்கிழமை புஷ்பக விமானத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயஸ்வாமி புறப்பாடு செய்வித்து பிரதி தினமும் ஸாயங்காலம் மஹந்யாஸ பூர்வமாய் அபிஷேக அலங்கார தீபாராதனைகளுடனும், இரவு 8 மணிக்கு மேல் சங்கீதக் கச்சேரிகளும் ஹரிகதா காலக்ஷேபங்களும் வெகு விமர்சையால் நடைபெறும்.

ஒரு கிருபர்.

ஸ்ரீ பால மீனும்பிகை ஸன்னதி மதுரை

சென்ற ஆடி-மீ கடைசி வெள்ளிக்கிழமையன்று மதுரை தமிழ் சங்கம் ரோட் 55 நெ. பங்களாவில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ பால மீனம்பிகைக்கு ஓர் மகாபிஷேகமும் ஸஹஸ்ரநாம அர்ச்சனைகளும், நடைபெற்றது. மாலை 5 மணி முதல் நாராயண அய்யங்கார் பஜனை கோஷ்டியும் நாராயணஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் பஜனை கோஷ்டியும், செல்லையா பிள்ளை திருப்புகழ் கோஷ்டியும் ஆக 3 பஜனைகள் நடைபெற்றது. 10,000 கணக்கான ஆஸ்திக ஜனங்கள் ஸ்வாமி தெரிசனத்திற்கு விஜயம் செய்தார்கள்.

ஆகையால் தென் இந்தியாவிலுள்ள ஆஸ்திக மக்கள்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால்:— மதுரையிலுள்ள ஆஸ்திக ஜனங்கள் 10,000 கணக்கானவர்கள் அக்ரம அட்டூழிய ஆலயப்பிரவேசம் நடந்து 1 வருஷம் ஆகியும் ஒரே சித்தபுத்தியுடன் மீனக்ஷி கோவிலுக்கு மகா கும்பாபிஷேகம் நடக்காமல் ஸான்னத்தியமில்லாத விக்ரகத்தை தெரிசிப்பது சாஸ்திர விரோதமென்று நன்கு உணர்ந்து தெரிசனத்திற்கு போகாமலிருப்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அனுல் இப்பொழுது நாடெங்கும் துஷ்பிரசாரம் நடந்துவருவது எல்லோரும் அறிந்ததே. ஆகையால் ஆஸ்திகர்கள் எல்லோரும் அவ்வித துஷ்பிரசாரத்திற்கு இணங்காமல் ஒவ்வொரு ஊரிலும், கிராமங்களிலும் அகில இந்திய வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கத்தை பலப்படுத்துவதுடன் இந்தஆலயப்பிரவேச சட்டம் ஒழியும் வரை எங்கு பார்த்தாலும் தீவிர கிளர்ச்சிகள் செய்து மதுரையிலுள்ள ஆஸ்திகர்களுக்கு பக்க பலமாக இருந்து அவர்களையும், அக்ரமமாக வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ள மீனக்ஷி கோவில் பட்டர்களையும் ஊக்கப்படுத்தவேணுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

ஓ. நி.

காங்கிரஸிலிருந்து விலகி தனிக்கக்ஷி.

காந்திஜியின் முயற்சி

ஸ்ரீமான் காந்தி வெளியிட்டுள்ள ஓர் வியாஸத்தில் அஹிம்ஸை விஷயமாக, தாம் ஸரியான வழியில் தான் போகிறதாயும் காரியகமிட்டி தான் தப்பு வழியில் சென்றுவிட்டதாயும், ஆதலால் அஹிம்ஸா வாதிகள் கட்டாயமாக காங்கிரஸிலிருந்து விலகிவிட வேண்டியது தானென்றும் அவர்களை யெல்லாம் ஒன்று சேர்த்து தனிக்கக்ஷி ஸ்தாபிக்க முடிவு செய்திருப்பதாயும், காங்கிரஸிலிருந்து விலகியவர்களின் ஜாபிதாவை தயார் செய்து வருவதாயும் கூறியுள்ளார்.

அநந்தபூர் அத்வைத ஸபை.

அநந்தபூர் அத்வைத சபையின் ஆதரவின் கீழ் ஆகஸ்ட்-மீ 2௳ பிரும்ம ஸ்ரீ நாராயண ஸ்வாமி சாஸ்திரிகள் ராம[illegible]த்திலுள்ள "அங்குலீய ப்ரதான" கட்ட[illegible]க உபந்யஸித்தார். ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர். இம்மாதிரியான [illegible] கதா பிரவசனங்களை அடிக்கடி ஏற்பாடு செய்து, ஜனங்களை தர்ம மார்க்கத்தில் ஈடுபடச் செய்யும் காரியதரிசி ஸ்ரீ வெங்கடேசம் பந்துலுவின் முயற்சி பாராட்டத்தக்கது.

5—8—40 அன்று நடந்த அத்வைத ஸபை கூட்டத்தில், சிறந்த ராஜரிஷியும், ஹிந்து தர்மாபிமானியும், கல்வியையும் கல்விமான்களையும் ஆதரித்த மைசூர் மஹாராஜா சமீபத்தில் மரணமடைந்ததைக் குறித்து, துக்கத்தை தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேறியது.

பட்டத்திற்கு வரவிருக்கும் அரசகுமாரரான ஸ்ரீ ஜயசாமராஜ உடையாருக்கு ஜயத்தையும், தீர்க்காயுளையும் அளிக்குமாறு ஒரு பிரார்த்தனை தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (ந-நி)

திருச்சி

பாகவத பிரவசன ஸமாப்தியும் ஸ்ரீ கிருஷ்ணாவதார மகோத்ஸவமும்

திருச்சி சின்னக்கடைத்தெரு விநயகர் கோவிலில் சுமார் 13 ஆண்டுகளுக்கதிகமாய் பன்முறை ஸ்ரீ ஜெகத்குரு ஆசார்யாளின் அனுக்ரஹத்தை முன்னிட்டு ஸ்ரீ ராமாயணம் மஹாபாரதம் ஆனந்தராமாயணம் ஹரிச்சந்திரோபாக்யானம் முதலான புராணங்களை ப்ரவசனம் செய்து கொண்டுவருகிற திருவையார் அம்மாளக்ரஹாரம்பிரும்ம ஸ்ரீ ஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் 1-8-38 முதல் உபக்ரமிக்கப்பட்டு பிரதி தினமும் உபந்யஸிக்கப்பட்டுவருகிற ஸர்வவேதஸாரபூதமும் ஸர்வாபீஷ்டப்ரதமான ஸ்ரீமத் பாகவதத்தில் நாளது விக்ரமஷை ஆவணிமீ 6௳ 21—8—40 புதன்கிழமை இரவு 9மணிக்கு ஸ்ரீ பாகவத ப்ரவசன ஸமாப்தியும் ஸ்ரீ கிருஷ்ணவதார மஹோத்ஸவமும் நடக்கிறபடியால் பக்தர்கள் ச்ரவணம் செய்து ஸ்ரீ பரமாத்மாவின் க்ருபைக்குப் பாத்ரமாக ஆக வேண்டுபடி கோருகிறேன்.

(ஓ. நி.)

ஸ்ரீராமர் வாலிக்கு ஸமாதானம் கூறல்

அவதார மஹிமை.

(திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் மாஜி ஹெட்மாஸ்டர் குலபதி சுப்ரமண்ய அய்யர் பி. எ.,) (3)

பிரபு வாலிக்கு ஸமாதானமாகக் கூறிய விஷயங்களை விஸ்தரிப்பதற்கு முன் மற்றும் சிலவற்றை இங்கே வரைதல் வேண்டும்.

ஸ்ரீராமர் மஹா விஷ்ணுவின் அவதாரம். பூர்ண மனுஷ்யாவதாரம். தசரதரின் புத்ரராய்த் தோன்றி, உத்தம புருஷன் இவ்வுலகில் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை நன்ருய் விளக்கினர். மேலும், தாம் மஹா விஷ்ணுவின் அவதாரம் என்பதையும் தக்க அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். தமது சகோதரர்கள் மூவரும் அம்சாவதார புருஷர்கள் அல்லவா? ஆதலின், அவர்களுக்கு இந்த உண்மை தெரிந்தே இருக்கவேண்டும். மகரிஷிகளும் தபோதனர்களும் ஆகிய சரபங்கரும், சுதீக்ஷ்ணரும் இந்த உண்மையை தேவேந்த்ரன் ரஹஸ்யமாகச் சொல்ல தெரிந்து கொண்டது மல்லாமல், தாங்களே தங்கள் தபோபலத்தால் பெற்ற திவ்யக் கண்ணுல் (தபஸா லப்தசக்ஷுஷா) ஸ்ரீராமர் தங்களுடைய ஹிருதய கமலத்தில் வசிக்கும் ஸ்ரீமந் நாராயணன் என்று அறிந்தார். (அஹம் வேஷ் த்வா—ஆரண் 5ம் ஸர்—29ம் ச்லோ பங்கஜதாரிணம்—ஆரண் 7ம் ஸர் 5ம் ச்லோ) பக்த சிகாமணியான ஹநுமானும் தெரிந்து கொண்டார்.

அவதார மஹிமை

எந்த நோக்கத்தைக் கொண்டு ஸர்வேச்ரன் பூமியில் அவதாரம் செய்கிருர்? இது விஷயம் பகவத் கீதை 4ம் அத்யாயம், 7வது 8வது ச்லோகங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. (யதாயதாஹி, பரித்ராணுய). எந்தக் காலங்களில் தர்மத்துக்கு க்ஷீணமும், அதர்மத்துக்கு அபிவிருத்தியும் ஏற்படுமோ, அக்காலங்களில் ஸாதுக்களை ரக்ஷித்து, துஷ்டர்களை நாசம் செய்து, தர்மத்தை ஸ்தாபிப்பதற்கு பகவான் அவதாரம் செய்கிருர் ஸ்ரீ ராமாவதாரம் எந்த தர்மத்தை நிலை நிறுத்துவதற்கு? சரணுகத தர்மத்தை, பாலகாண்டம் 15ம் ஸர்க்கம் 26வது ச்லோகத்தில் ‘தர்ம ஸம்ஹிதாந்’ என்றதால் தெரிகிறது. இதற்கு ஸ்ரீ கோவிந்த ராஜாள் ‘சரணுகதி ரூபஸம் யுதாந்’ என்று வியாக்யானம் செய்துள்ளார். இதுவுமன்றி ஸ்ரீமந் நாராயணன் தாமே தசரதரது புத்திரராய்த் தோன்றி ராவணனைக் கொல்வதாக தைர்யம சொல்லி தேவர்களுக்கு அபய ப்ரதானம் செய்தார் என்று இந்த 15ம் ஸர்க்கத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. (பயம் த்யஜத பத்ரம் வோ) ஆகவே இந்த அவதாரத்தின் முக்ய நோக்கம் இரண்டு: (1) ராவண வதம்; (2) ஸாதுக்களைக் காப்பாற்றி, துஷ்டர்களைக் கொன்று, சரணுகத தர்மத்தை ஸ்தாபித்தல். ஸ்ரீ ராமர் ராவணனைக் கொன்ருர் என்பது யாவருக்கும் தெரிந்ததே. எந்த ஸாதுவைக் காப்பாற்றி, எந்த துஷ்டனைக் கொன்று, சரணுகத தர்மத்தை பிரபு ஸ்தாபித்தார்? இதைப்பற்றி ஆலோசித்தல் வேண்டும்.

சரணுகத தர்மத்தை நிலை நிறுத்தவந்த பிரபுவுக்கு எது அதர்மம் ஆகும்? எவன் துஷ்க்ருதன் ஆவன்? எவனொருவன் தன்னிடம் வந்து சரணுகதி பண்ணினவனை திரஸ்கரித்து, ஹிம்ஸிக்கிருனே அவன் தான் துஷ்க்ருதன், அவன் செயல்தான் அதர்மம். எவனொருவன் சரணுகதி பண்ணி, அது அங்கீகரிக்கப்படாமல், தான் யாருக்கு சரணுகதி செய்தானே அவனுலேயே ஹிம்ஸிக்கப்படுகிருனே அவன் ஸாது, அவன் அனுஷ்டிக்கும் வழி தான் ஸாது வ்ருத்தி. இப்படிப்பட்டவர்களுக்கு ஸ்ரீமத் ராமாயணத்தில் தக்க உதாரணம் வாலியும், சுக்ரீவனுமே தான்.

கிஷ்கிந்தாகண்டத்தில், முதல் சில ஸர்க்கங்களில், ஸ்ரீராமருக்கும் சுக்ரீவனுக்கும் ஹநுமானுல் செய்துவைக்கப்பட்ட ஸக்யமுடி அவர்கள் ஒருவருக்கு ஒருவர் செய்து கொண்ட சரணுகதியும் விவரிக்கப்பட்டிருககின்றன. சுக்ரீவன் தமக்கு சரணுகதி செய்தவுடன், ஸ்ரீராமர் அவனைப்பார்த்து “சிநேகத்தின் பலன் உபகாரம். உனக்கு அபகாரம் செய்த வாலியின் மேல் என் பாணத்தைப் போட்டு அவனைவீழ்த்துகிறேன், உன் விருப்பத்தைப்பூர்த்தி செய்கிறேன். உறுதியாய் வாக்குத்தத்தம் பண்ணுகிறேன்,” என்ருர் (அ). பிறகு பிரபு அவனைப்பார்த்துச் சொல்லியதாவது, “என்னகாரணத்தால் வாலிக்கும் உனக்கும் பகைநேர்ந்தது? உண்மையாக இதைக் கேட்க விரும்புகிறேன். பகையின் காரணத்தை அறிந்து, பின் நம்பலத்தையும் அவன்பலத்தையும் ஆலோசித்துப்பார்த்து உனக்கு சுகத்தை உண்டாக்கும் வழியைத் தேடுவேன், என் பாணத்தால் உன் சத்ரு மாண்டான் என்று நிச்சியமாய் நம்பு” (8ம் ஸர்க்கம் 41, 42, 44ம் ச்லோ.) சுகம்ஹி என்று ஆரம்பிக்கும் 12ம் ச்லோகத்துக்கு திவ்யமாய் கோவிந்தராஜாள் வியாக்யானம் செய்திருக்கிருர் அதை ஒட்டி இந்த ச்லோகத்துக்கு அர்த்தம் இது: “நீ ஸொல்பதப்பு செய்து, அதற்காக அவன் உன்னை பலமாக ஹிம்ஸித்திருந்தால், அவனை உடனே கொல்வேன். அப்படிக்கில்லாமல். நீ பெரிய தப்பு செய்து, அதற்கு அவன் விதித்த தண்டனை கொஞ்சமாயிருந்தால், உங்கள் இருவருக்கும் ஸமாதானம் செய்து வைக்கிறேன்.” (ஆ) (ஸ்வல்பாபராதே ப்ரபலவைரம் சேத்)

இங்கே மேற்குறித்த (அ), (ஆ) என்ற விஷயங்களை ஆலோசிக்குங்கால், நமக்கு ஸ்பஷ்டமாகத் தெரிவது யாது? தமக்கு சுக்ரீவன் சரணுகதி செய்ததும் அவனை எப்படியோ காப்பாற்றி விடுவது என்று திட ஸங்கல்பம் செய்து கொண்டார் பிரபு. ஆயினும் வாலியைக் கொன்றே தீருவது என்ற ஸங்கல்பம் கொள்ள வில்லை. ஆனுல் அவசியம் இருந்தால் அவனைக் கொல்வதென்றும், இல்லாவிடில், இருவருக்கும் ஸமாதானம் செய்து வைக்க வேண்டும், என்றும் தீர்மானித்தார், என்பதே. இதை நாம் மறக்கக் கூடாது.

சுக்ரீவன் வாலிக்குச் செய்த சரணுகதி

மேற் சொன்ன பிரகாரம் நியாயாநியாயங்களை அறிய வேண்டி, பிரபு சுக்ரீவனைப் பார்த்து, ‘நீ வாலியிடம் எவ்விதம் நடந்து கொண்டாய், சொல்’ என்று வினவ, அவன் வாலி மாயாவியைக் கொன்று பிலத்வாரத்தினின்றும் வெளிவந்து, கிஷ்கிந்தைக்குத் திரும்பி வந்த விருத்தாந்தத்தை விவரித்து, பிறகு தான் வாலியை பயத்துடனும், பக்தியுடனும் வரவேற்ற மாதிரியை வர்ணித்தான் அது பின்வருமாறு:— (10ம் ஸர்க்கம்)

1ம் ச்லோகம்:— அஹம் ப்ரஸாதயாம் சக்ரேப்ராதரம்/— நான் என் சகோதரனுடைய தயவை அடைய முயற்சித்தேன் (ஆ)

3ம் ச்லோகம்:-அநாத ஸ்யஹிமே நாத:/—திக்கற்ற எனக்கு நீயே நாதன் (ஆ)

(அ) (ஆ) எவை போல் இருக்கின்றன? ஹநுமான் தாமிருக்குமிடம் வந்து சுக்ரீவன் விஷயத்தை சொன்னவுடன் ஸ்ரீராமரது ஆக்ஞையால் லக்ஷ்மணன் உரைத்தது என்ன? (4ம் ஸர்க்கம்)

21ம் ச்லோகம்:- ராமோ வாநரேந்த்ரஸ்ய ப்ரஸாதம் அபிகாங்க்ஷதே/— 24ம் ச்லோகமும் பார்க்க (அ)

8ல் ச்லோகம்:— லோகநாத: சுக்ரீவம் நாதம் இச்சதி. (ஆ)

ஆகவே, மனுஷ்ய பாவத்தில் ஸ்ரீ ராமர் சுக்ரீவனுக்கு எவ்விதம் சரணுகதி செய்தாரோ, அவ்விதமே சுக்ரீவன் வாலிக்கு சரணுகதி பண்ணினுன் என்பது தெளிவாகிறது.

மேலும், சுக்ரீவன் என்ன சொன்னுன்? செய்தான்?

7-ம் ச்லோகம்-:த்வமேவ ராஜாச-நீதான் ராஜா. நான் எப்போதும் போல் உன் அடிமை (இ).

3-ம் ச்லோகம்-சத்ரம் ஸவாலவ்யஜனம் ப்ரதீச்சஸ்வ/-வெண்குடைய நான் உனக்கு பிடிக்கிறேன். சாமரை வீசுகிறேன் (ஈ).

8-ம் ச்லோகம்-ந்யாஸபூதம் இதம் ராஜ்யம்/-இந்த ராஜ்யம் என்னிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது (2).

9-ம் ச்லோகம்-யாசேத்வாம் சிரஸா ராஜந்மயா பத்தேயம் அஞ்சலி:/-நான் அஞ்சலி செய்துகொண்டு தலை வணங்கி, உன் பாதங்களில் விழுகிறேன் (ஊ).

(இ), (ஈ), (உ), (ஊ) எவை போல் இருக்கின்றன? பரதன் ஸ்ரீ ராமரிடம் சொன்னது, செய்தது போன்று.

ஸம்க்ஷேப ராமாயணம் 36ம் ச்லோகம் த்வமேவ ராஜா தர்மக்ஞ/-(இ).

அயோத்யா காண்டம் 104-ம் ஸர்க்கம் 8-ம் ச்லோகம்—தஸ்யமே தாஸ பூதஸ்ய(இ).

அயோத்யா காண்டம் 115-ம் ஸர்க்கம் 16-ம் ச்லோகம்-சத்ரம் தாரயத க்ஷிப்ரம்-ஷை காண்டம் 91-ம் ஸர்க்கம் 39-ம் ச்லோகமும் பார்க்க (ஈ).

ஸங்க்ஷேப ராமாயணம் 37-ம் ச்லோகம்-ந்யாஸம் தத்வாபுன: புன:/. அயோத்யா காண்டம் 115-ம் ஸர்க்கம். 14, 17-ம் ச்லோகங்களையும் பார்க்க (2).

அயோத்யா காண்டம் 106-ம் ஸர்க்கம் 31-ம் ச்லோகம்-சிரஸா த்வாபியாசே஽ஹம் குருஷ்வகருணும்மயி/ஷை காண்டம் 106-ம் ஸர்க்கம் 37-ம் ச்லோகமும் பார்க்க (ஊ).

இவைகளை கவனித்தால் சுக்ரீவ சரணுகதி பரத சரணுகதியைப் போன்றது என்பது தெளிவாகிறது.

மேலும், மேற்குறித்த (ஊ)க்கள் இரண்டும் எதை ஒத்திருக்கின்றன? யுத்த காண்டம் 18-ம் ஸர்க்கம் 27-ம் ச்லோகத்தில் ‘பத்தாஞ்சலி புடம் தீனம் யாசந்தம் சரணுகதம்’ என்றுள்ளது. இது கண்டு மகரிஷியின் ச்லோகம். இதை பிரபு சொல்லி சரணுகத தர்மத்தை அனுஷ்டிப்பவன் எவ்விதம் நடப்பான் என்று வர்ணிக்கிருர் (ஊ)க்கள் இரண்டும் கண்டு மகரிஷியின் இந்த வாக்கியத்தை ஒத்தே இருக்கிறது.

இவ்விஷயங்களினின்று விசதம் ஆவது யாது? சுக்ரீவன் வாலிக்குச் செய்த சரணுகதி சாஸ்திர சம்மதமானது, ஸ்ரீ ராமர் மனுஷ்ய பாவனையால் சுக்ரீவனுக்குச்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க.)

ஸ்ரீ ராமர் வாலிக்கு ஸமாதானம் கூறல்

(6-ம் பக்கம் தொடர்ச்சி.)

செய்த சரணாகதியையும், பரதர் ஸ்ரீ ராமருக்குப் பண்ணின சரணாகதியையும் போன்றது என்பது தான்.

இந்த உண்மையைக் கண்டு கொண்ட பிரபு சுக்ரீவன், தாம் எந்த தர்மத்தை ஸ்தாபிப்பதற்காக அவதாரம் செய்தாரோ அந்த சரணாகத தர்மத்தை ஒழுங்காய் நடத்துபவன் ஆதலின், ஸாது, அவனை ரக்ஷிப்பது தம் கடமை என்று உணர்ந்தார். (பரித்ராணாய ஸாதூனாம்).

இவ்விதம் சரணாகதி பண்ணின சுக்ரீவனுக்கு வலி செய்தது என்ன? அந்த சரணாகதியை அங்கீகரிக்காமல், அவன் சுக்ரீவனைப் பார்த்து 'நிக்த்வாம் -ஜி' என்று, விபீஷணனை ராவணன் பார்த்து நிந்தித்தது போல (த்வாம் து திக் குல பாம்ஸநம்) நிந்தித்து, மந்த்ரிகள் முதலானவர்களது ஸபை கூட்டி, அவர்களின் முன் கடுமையான மொழிகளைச் சொல்லி, ஒரே வஸ்த்ரத்துடன் தேசத்தை விட்டுத் துரத்தி விட்டான். இவ்விதம் தாம் எந்த தர்மத்தை ஸ்தாபிக்க வந்தாரோ அந்த சரணாகதி தர்மத்தை அடியோடு நிராகரித்து, தன்னிடம் உண்மையாய் சரணாகதி செய்த சுக்ரீவனை மிருதியும் ஹிம்ஸித்த காரணத்தால், ஸ்ரீராமர் வாலி துஷ்க்ருதன், பாபி, என்று நன்றாய்த் தெரிந்து கொண்டு தாம் அவதரித்த காலத்தில் கொண்டுள்ள ஸங்கல்பமாகிய 'துஷ்க்ருத விநாசத்தை' நிறைவேற்றத் தீர்மானித்து, இந்த வாலியைக் கொன்றே தீர வேண்டுமென்று முடிவு செய்தார். (விநாசாயச துஷ்க்ருதாம்).

மேலே சொல்லப்பட்ட ஸ்ரீராமவதாரத்தின் முக்ய நோக்கங்கள் இரண்டும் வால்மீகி ராமாயண மங்கள ச்லோகமாகிற 'மாநிஷாத, ச்லோகத்தில் தொனிக்கின்றது என்று சொல்லும்படி ஸ்ரீ கோவிந்தராஜாள் வியாக்யானம் செய்துள்ளார். அந்த வியாக்யானங்களை ஒட்டி இரண்டு அர்த்தங்களும் பின்வருமாறு:—

ஹே, லக்ஷ்மீநாராயண, காமமோஹித, க்ரௌஞ்ச மிதுனங்களான ராவணன், மந்தோதரி இவர்களுள் ராவணனை ஸம்ஹாரம் செய்ததால் நாங்கள் எல்லோரும் தேவரீருடைய பெருமையைப்புகழ்ந்து பல்லாண்டு பாடுமாறு அநுக்ரஹிக்க!

ஹே, லக்ஷ்மீநாராயண, காமமோஹித க்ரௌஞ்ச மிதுனமான வாலி. தாரை இருவர்களுள் வாலியை ஸம்ஹாரம் செய்ததால் நாங்கள் எல்லோரும் தேவரீருடைய பெருமையைப்புகழ்ந்து பல்லாண்டு பாடுமாறு அநுக்ரஹிக்க!

ஸ்ரீராமர் வாலிக்குச் சொன்ன ஸமாதானம்

வாலி சாட்டிய குற்றங்களுக்கு பிரபு பின்வருமாறு ஸமாதானம் கூறினர்:—

பாராங்குவதம். நீ சுக்ரீவனோடு மெய் மறந்து போர் செய்து நான் இருப்பதை கவனியாது இருக்க, நான் உன் மீது பாணம் போட்டது தப்பு என்று சொல்லுகிறாய். நானோ சுக்கிரீவன் எனக்குச் செய்த சரணாகதியை அங்கீகரித்து அவனுடன் கூட இருந்து யுத்தத்தில் என்பாணத்தால் உன்னை அடிப்பேன் என்று வாக்குத்தத்தம் செய்தேன். அவ்விதமே உன்னை அடித்தேன் தஸ்மாத்வாம் நிஹதம் யுத்தேமயா பாணேனவானர.

நீ எனக்கோ, என் நகரத்திலோ, தேசத்திலோ யாதொரு பாபமும் செய்ய வில்லை என்று மொழிகிறாய். நான் தர்ம சாஸ்திரம் தெரியாதவன் என்றும் இந்திரியங்களுக்கு வசப்பட்டு மனம் போனபடி துஷ்க்ருத்யங்கள் செய்கிறேன் என்றும் நிந்திக்கிறாய். நான் சொல்வதைக் கவனி. நீ தெரிந்துள்ளதாகச் சொல்கிற தர்ம சாஸ்திரத்தில் என்ன காணப்படுகிறது? நீ உன் தம்பியின் பால் நடந்து கொண்ட மாதிரியும் அவனுக்கு நீ செய்துள்ள அபசாரங்களும் கொடியபாபங்கள் என்று அந்த சாஸ்திரம் சொல்ல வில்லையா? அதே தர்ம சாஸ்திரங்கள் உன் பாபங்களுக்கு மரண தண்டனையை விதிக்கவில்லையா? இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த நானும் என் சகோதரர்களும் நாங்கள் வசிக்கும் இடங்களில் அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலைநாட்டுவதாக ஸங்கல்பம் பூண்டு உள்ளோம். (தர்ம ஸந்தான மிச்சவ:) ஆதலால் தான் நான் உன்னை இவ்விதம் வதைத்தேன். வதைக்காமல் இருந்தால் அது எனக்கு பாபமாகும் என்று மனுதர்ம சாஸ்த்ரம் கூறுகிறதே.

மேலும், நீ வேறொருவிதமாய் உன்னைப் பற்றி பேசுகிறாய். நான் காட்டில் காய்கிழங்குகளைத்தின்று ஜீவிக்கும் குரங்குஜாதி. எங்களுக்கு ஐந்து விரல்கள் உண்டு ஆயினும் தர்ம சாஸ்த்ரத்தை ஒட்டி, மாம்ஸம் தோல் முதலியவைகளுக்காக கொல்லத்தக்குந்தவைகள் அல்ல. ஆதலின், என்னைக் கொல்வது அதர்மம் என்று சொல்லுகிறாய். நான் உன்னுடைய மாம்ஸம் முதலியவைகளை அடையவிரும்பி உன்னைக்கொல்லவில்லை. நீ பாபகார்யங்களைச் செய்துகொண்டு திரியும் புலியைப்போன்ற ஒரு கூட்டம் மிருகம் ஆகையால் உன்னைவதைப்பது ராஜதர்மமே.

இவ்விதம் தர்ம சாஸ்த்ரத்தை ஒட்டி ஸமாதானம் செவ்வையாய்ச் சொல்லி பிறகு பிரபு தமது ஈச்வரத் தன்மையையும் அவதார மஹிமையையும் வாலிக்குத் தெரிவிப்போம் என்று ஸங்கல்பித்து. அவனை நோக்கி கடாக்ஷித்து, "தேவா: மநுஷ்ய ரூபேண சரந்தியேதே மஹீதலே/—தேவர்கள் மனுஷ்ய ரூபம் தரித்து பூமியில் ஸஞ்சரிக்கிறார்கள்," என்று மொழிந்தார். வாலியும் பிரபுவின் ப்ரஸாதத்தால் சித்தம் பரிசுத்தமானவனாக ஆகி, மனம் தெளிந்து எதிரில் நிற்கும் பிரபு மனுஷ்யாவதாரம் செய்த மகாவிஷ்ணுவே என்று கண்டு கொண்டான். தர்ம ஸூக்ஷ்மத்தையும் அறிந்து கொண்டான். அதாவது பிரபு சரணாகத தர்மத்தை ஸ்தாபிக்கவே அவதாரம் செய்தார் என்பதையும், அந்த தர்மத்தை தன்னிடம் அனுஷ்டித்த சுக்ரீவனை ஹிம்ஸித்ததால், தான் துஷ்க்ருதன், ஆதலால் பிரபு தன்னைக் கொன்றது நியாயமே என்றும் தெரிந்துக்கொண்டான். உடனே மிகவும் பச்சாத்தாபம் அடைந்து, கை கூப்பி, "ப்ரபோ, தாங்கள் சொன்னதும், செய்ததும முற்றிலும் நியாயம். அக்ஞானத்தால் தங்களைத் தூஷித்தேன். என்னை மன்னித்து அனுக்ரஹித்து காப்பாற்ற வேண்டும்," என்று மிகுந்த வணக்கத்துடன் பிரார்த்தித்தான். ஸ்ரீ ராமசந்திர பிரபுவும் அவ்விதமே அனுக்ரஹித்தார்.

அல்லயான்ஸ் கம்பெனி பிரசுரங்கள்

திருப்புகழ் பாராயண திருமுறை	1	4	0
நால்வர் சரித்திரம் காலிகோ	0	12	0
” ” ராப்பர்	0	10	0
பாரதசாரம்	1	2	0
ஸ்ரீ ராமாயண வினாவிடை	1	8	0

கிடைக்குமிடம் ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

கோவிலூர் அகில இந்திய வர்ணாஶ்ரம சுயராஜ்ய சங்கம்.

விசேஷ மஹாநாடு

ஆகஸ்ட்டுமீ 4, 5 தேதிகளில் கோவிலூரில் நடைபெற்ற ஷை சங்க மஹாநாட்டில் திருவண்ணாமலை, திருக்களர், சிவபுரி தேவஸ்தான தர்மகர்த்தா கோட்டையூர் ஸ்ரீமான் க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்களின் தலைமையுரை:—

ஐயன்மீர்!

இம்மஹாநாட்டிற்கு தலைமை தாங்கும் பேறுபெற்றது எனது பெரும் பாக்கியம் இப்பதவியை அளித்த உங்கட்கு எனது வந்தனம். நான் நீண்ட பிரசங்கம் செய்ய உத்தேசிக்கவில்லை. சுருக்கச் சொல்லி எனது தலைமையுரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். மஹாநாடு கூடிக் கலைவதோடு நில்லாமல் செயல்புரிய நமக்குப் போதியபலத்தை எல்லாம் வல்ல இறைவன் அளித்து கருதிய கருமம் கைகூட அருள்புரிவாராக.

மானிட வர்க்கம் நற்கதி அடைய வேதம் பரம்பொருளால் அருளப்பெற்றது. வேதத்தின் நுண்பொருளை சாஸ்திரங்கள் விஸ்தரிகின்றன. நமது ரிஷிகள், சைவ வைஷ்ணவ ஆச்சார்யர்கள், வேதநெறி கடைப்பிடித்து மேன்மையுற்ற விவரங்களை புராணங்கள் உணர்த்துகின்றன. அப்பெரியார்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய நமது மூதாதையோர்கள் சீரும் சிறப்பும் பெற்றிருந்ததை சரித்திரங்கள் தெரிவிக்கின்றன. இன்னும் பல பெரியோர்கள் நம்முடன் இருந்து வருவது கண்கூடு. உலகிற்கே ஆத்ம ஞானத்தை அளித்து வரும் தனிப் பெருமை நமது பரத கண்டத்திற்கே உரியது.

பாரமார்த்திக தன்மைக்கும் பண்டை ஆசார அனுஷ்டானங்கட்கும் ஹானி ஏற்படத்தக்க நிலையில் பலவழிகளிலும் இன்று செயல் புரியப்பட்டுவருகின்றது. கிருஸ்தவ மகமதிய மதப் பிராசாரம், அரசாங்கத்தின் பிரித்தாளும் சூழ்ச்சி, பல ஸ்தாபனங்கள் மூலம் நம்மவர்களின் விஷமப் பிரசாரம், ஸநாதனிகளின் அசட்டையான போக்கு எல்லாம் ஒருங்கே சேர்ந்து நம்மை ஹீனஸ்திதிகருக் கொணர்ந்து விட்டது. இந்நிலையிலிருந்து நாம் மீளவேண்டும். பாரத தேசம் முழுதும் கட்டுப்பாடான தீவிர பிரசாரம் செய்தே யாகவேண்டும். வேறு வழியில்லை.

தற்கால நாட்டில் உள்ள முக்கிய கக்ஷிகள் நான்கு. காங்கிரஸ், ஹிந்து மஹா ஸபை, முஸ்லீம் லீக், அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம், அரும்பெரும் தியாகங்கள் புரிந்துள்ள காங்கிரஸ் ஸபை, நமது பெரும் ஆதரவு பெற்று வளர்ந்தோங்கிய சபை. அதிகாரம் பெற்றபின் கராச்சி காங்கிரஸ் தீர்மானத்திற்கு முற்றிலும் விரோதமாக மதத்தில் தலையிட்டு பரத கண்டத்தின் பெருமைக்குரியதான வைதிக மதத்தை அழிக்கும் தன்மையில் நீண்டார் ஆலயப்பிரவேசச் சட்டம் செய்த அநீதியை என்னென்று உரைப்பது!

தேச நாசகரமான வகுப்புத் தீர்ப்பில் தேசிய முஸ்லீம்களை திருப்திப்படுத்த காந்திஜீயின் தூண்டுதலில் காங்கிரஸை நடுநிலைமைக்கு உள்ளாக்கிய துரோகத்தையும்; சமீப காலத்தில் முஸ்லீம் லீக் தலைவர் ஜின்னா சா

[தொடர்ச்சி 8 பக்கம் பார்க்க]

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியா மருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
படை மருந்து
தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்

விசேஷ மஹாநாடு.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

ஹேப் ஹிந்து இந்தியா, முஸ்லீம் இந்தியா என இந்தியாவை இரண்டாகப் பிரிக்க முற்பட்ட புன்மையையும் பலமாகஎதிர்த்து ஹிந்துக்களின் பலத்தை அதிகரிக்கச் செய்ய ஹிந்துமஹா ஸபை மேற்கொண்டுள்ள வேலையை போற்றக் கூடுமானலும் தீண்டாதார் ஆலயப்பிரவேசம் மத சமூக விஷயங்களில் சட்ட சபைகள் தலையிடுதல், இவைகளில் அதன் நோக்கம் வைதீக ஹிந்துக்கள் ஏற்கக்கூடியதன்று.

முஸ்லீம் லீகோ, முஸ்லீம் சமூகத்திற்கு ஏற்ற நியாயமான முறையில் வேலை செய்வதை விடுத்து அதீதமான கோரிக்கைகளை வெளியிட்டும், ஹிந்து நலன்கள் பாதிக்கத்தக்க வழியில் செயல் புரிவதும் எவற்றினும் மேலதாக நமது புண்ணிய பூமியாம் பரத கண்டத்தை துண்டாக்க முற்படும் புன்மையும் நாம் சகித்துக்கொண்டிருக்க முடியாது.

இங்கிலையில் சனதனிகள் தயக்கத்தை விடுத்து, வேத நெறியையும், ஆசார அனுஷ்டானங்களையும் நோக்கங்களாகக்கொண்டு பரத கண்டத்தின் மேன்மைக்கு உழைத்து வரும் அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தை பலப் படுத்துங்கள். அதன் ஒப்புயர்வற்ற தலைவரான ராவ்சாகேப் என். நடேசய்யரவர்கள் பீ.எ., பீ.எல்., தீண்டாதார் ஆலயப்பிரவேசச் சட்டத்தைத் தகர்த்தெரிய இடைவிடாது தளராத ஊக்கத்துடன் செய்துவரும் தீவிர கிளர்ச்சி நாட்டில் புத்துணர்ச்சியை உண்டுபண்ணிற்று. சென்ற ஒரு வருஷ காலமாய் அம்மாபெரும் தலைவரின்கீழ் நாடெங்குமுள்ள ஸ்திரீ புமான்கள் அக்கொடிய சட்டம் ரத்தாக செய்துவரும் கிளர்ச்சியை எவர்தான் அறியார்?

கிராமங்கள் தோறும் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். ஸநாதன தர்ம வித்யாலயங்கள் நிறுவவேண்டும். ஆஸ்திக ஹிந்து மாதர் சங்கம், தார்மீக யுவ சங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். கட்டுப்பாடான முறையில் தீவிர பிரசாரம் செய்தாக வேண்டும். ஜயமுண்டு பயமில்லை. தர்மமே ஜயம்,

கோவிலூர் ஆடிப்பூர உத்ஸவம்

ஸ்ரீ திருநெல்லை அம்பாள் சமேத கொற்றவாளீஸ்வரன் உத்ஸவம் இவ்வருஷம் மிக சிறப்பாய் 10 தினங்களும் நடந்தேறியது. போன வருஷம் ரதத்தில் காங்கிரஸ் தேசிய கொடி கட்டியிருந்தது. ரதத்தில் இரு சிறுவர் அடிபட்டு காயமுற்றனர். இவ்வருஷம் தேருக்கு சுவாமி போக அகாலமானலும் கூட ரதத்தில் காங்கிரஸ் கொடி கட்டவில்லை ரதம் புறப்பட்ட ஒரு மணி நேரத்திற்கெல்லாம் யாதொரு இடஞ்சலன்னியில் ரதம் வந்து சேர்ந்தது.

குறிப்பிடத்தக்கது. உத்ஸவம் 10 தினங்களும் கோவிலூர் பிரும்மஸ்ரீ சின்னய்யா அய்யர் அவர்களால் வந்திருந்த பிராமணர்களுக்கும் வேதபாராயண கோஷ்டியார்களுக்கும் சந்தர்ப்பணை நடத்தப்பட்டது. உத்ஸவம் 10 தினங்களும் திருவாரூர் டி. எஸ். வைத்தியநாதன்பிரதர்ஸ் நாதஸ்வரமும் நடந்தது. (க. கி)

ஸ்ரீமத் பாகவதம்.

திருநல்வேலி அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிரும அய்யரவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

கலிகோ பைண்ட் இங்கிலீஷ்	2	0	0
சாதாரண ,, ,,	1	8	0
கலிகோ ,, தமிழ்	2	0	0
7, 8, 9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது.	0	8	0

N.E. வெங்கடேச சர்மா எழுதியது.

ஸம்ஸ்கிருத ஸ்வபோதினி	1	0	0
கிரந்த தமிழ் அகராதி	4	0	0
ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி	2	0	0
தமிழ் ஸம்ஸ்கிருத அகராதி	1	0	0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ௐ

ஸர்வே ஜனா: ஸுகிநோ பவந்து! ஸகல ஜனங்களும் சுகமடையட்டும்!
அங்கத்தினர் : அணா 4 (வருடத்திற்கு). சிறுவர்கள் கூட—அங்கத்தினர்.
கொடையாளர் : ரூ. 1. (மேனும்) பெரியவர்—குறைந்தது. கொடையாளர்.
போஷகர் : ரூ.100. (ஒருமுறை) ஒவ்வொரு தனவந்தரும்—போஷகர்.

சீர்திருத்தவாதிகள்

1,00,00,000 வேண்டும்!

பிறரையல்ல! தங்களையே திருத்திக்கொள்பவர்!

நாடெங்கும் ஸ. ஸா. ம. கல்விச்சங்கங்களில் பஜனைகள், உபந்யாஸங்கள்
ப்ரசுரங்கள் மூலம் மெய்யறிவைப் பரப்பும் உயர்தொண்டு செய்க!

ஸங்கங்கள் ஆரம்பிப்பவர் நிரந்தர கௌரவ அங்கத்தினராவர்
ஸ. ஸா. ம. அங்கத்தினர்———உண்மை ஆத்ம அபிவிருத்தி
ஸ. ஸா. ம. கல்விச்சங்கங்கள்———ஸகல ஜன க்ஷேமம்

[அச்சடித்தல் இனம் ப்ரசுரங்கள் !] விபரங்களுக்கு தபால்தலை அனுப்பவும்.

ஸர்வஹித ஸாஹித்ய மண்டலம்

[அனைவர் நல நூற்கழகம்]

பத்திரிகை: ஆர்யாவர்த்தஜோதி தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி. அச்சுச்சாலை: லைட் ஆப் ஏஷ்யா பிரஸ்

லிகிதமேளளிகன் (ஸ. ஸா. ம. விளம்பரத்துடன்) இனம்
அங்கத்தினர் (முதல் 500-க்கு) 25 விகிதம். கொடையாளர் (முதல் 250): 100 விகிதம்.

இவ்விளம்பரத்தை அட்டையில் ஒட்டிப் பலர் காண கார்யாலயத்திலோ கடையிலோ வைப்பவரும், அவருக்கு இதை வெட்டிக் கொடுப்பவரும் ஒரு வருடத்திற்கு இலவச அங்கத்தினராவார்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.